முருகப்பெருமான் துணை

ஆசான் அரங்கமகா ஞானியர்க்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1387

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.07.2023, திங்கட்கிழமை

1. ஞானியே ஆறுமுக அரங்கா வாழ்க
ஞாலமதை காக்கவந்த தேசிகா வாழ்க
வானவர்கள் போற்றுகின்ற அரங்கனே வாழ்க
வையகத்தை மீட்க வந்த குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆடி மாதம் முதல் நாள், 17.07.2023, திங்கட்கிழமை)
தாழ்விலா அரங்கன் மகா சக்தி
தரணியில் இன்னும் ஆற்றல்பெருகவே
3. பெருகவே சுப்ரமணியர் யானும்
பிசகின்றி ஞான அறிவுரை ஆசி தொடர்வேன் முருகா எனும் ஜெபதபங்கள்
மொழிகுவேன் அரங்கன் நித்தம் பாராயணமாக
மிகைபட முணகிக்கொண்டு வரவர வையகத்தில் சக்திநிலை கூடி
4. கூடியே ஆறுமுகன் யான் உள்ளிருந்து
குரு அரங்கன் எழுந்து நடந்து ஆற்றல்பட
பேருலகம் வலம் வரவும்
பேரிடரின்றி இந்த உலகைக் காக்கவும்
5. தர்மஞான சக்தியோடு தவமபலத்தை கூட்டி அரங்கன்
தனிப்பெருங்கருணை வடிவாக
வள்ளலாக வாழுகின்ற ஞானியாக
வரம்தந்து மக்களை மீட்கும் தவசியாக
6. இல்லாமை போக்கி இந்த உலகையே
இலகுவாக்கி எல்லா வளமும் தரும் ஆற்றல்பொருந்திய ஞானியாக
ஆகவே மாற்றி அற்புதத்தை ஆறுமுகன் யான்
அரங்கன் சக்திக்குள் இணைத்து

7. மாறுதலை உலகினில் நடத்துவேன்
மகான் வழி இந்த
அற்புதங்கள் உலகெங்கும் நிகழ்த்துவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–